DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண். 229/2021**

**அ.சா.–3**

| | |
|---|---|
| பெயர் : திருமதி. கனிமொழி | கிராமம்: நாழிக்கல்பட்டி |
| க/பெ. : திரு. முனுசாமி | தாலூக்கா : மல்லூர் |
| வயது : 30 | தொழில்: கூலி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 44 of 1969, this the 24th day of July, 2025.

( 2 முதல் 4 எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்குரைஞர் ஆஜர் )

**முதல்விசாரணை**:–

நான் நாழிக்கல்பட்டியில் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் ஆஜராகியுள்ள எதிரிகளை எனக்கு தெரியும். இவ்வழக்கில் இறந்தபோன திலிப்குமார் எனது அக்கா மகன் ஆவார். அ.சா.1 வசந்தி, அ.சா.2 நிகிதா ஆகியோர்களை எனக்கு தெரியும். இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. திலிப்குமாரை கொலை செய்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். எதனால் கொலை செய்ப்பட்டார் என்ற விவரத்தை நான் பின்னிட்டும் தெரிந்துகொள்ளவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கேட்டு, அனுமதிக்கப்பட்டது.)

**குறுக்குவிசாரணை(அரசு தரப்பில்)**:–

நான் போலிசார் விசாரணையில் நாழிக்கல்பட்டி, காந்திநகரில் வசித்து வருவதாகவும், இளையபாரதம் நண்பர்கள் குழு எங்கள் பகுதியில் செயல் பட்டு

Sd/ R. Velaras,
I Additional District Judge,
Salem.

வருவதாகவும், அந்த குழுவில் என் அக்கா மகனும் ஆரம்பத்தில் ஒரு உறுப்பினராக இருந்தார் எனவும், பின்னிட்டு என் அக்கா மகன் தனியாகவும், எதிரிகள் தனியாகவும் பிரிந்து எங்கள் பகுதியில் உள்ள விநாயகர் கோவிலில் விநாயகர் சிலை வைத்து விநாயகர் சதுர்த்தியை தனித்தனியாக கொண்டாடினார்கள் என்றும், 04.09.2019 அன்று காலை 10 மணியளவில் எதிரிகள் தரப்பினரும், எனது அக்கா மகன் தரப்பினரும் விநாயகர் சிலை கரைப்பதற்காக தனித்தனியாக எடுத்துக்கொண்டு மேட்டுர் நோக்கி வரும்போது எங்கள் ஊர் அம்பேத்கர் நகர் மூலக்கடை அருகே இருதரப்பினரும் ஒரே இடத்திற்கு வந்ததால் ஒருவரை பார்த்து ஒருவர் பேசிக்கொண்டதில் தகராறு ஏற்பட்டது என்றும், 1ம் எதிரியை பார்த்து எனது அக்கா மகன் கை நீட்டி பேசி தகராறு செய்துள்ளார் என்றும், அதனால் 1ம் எதிரியின் தரப்பினர் இவ்வாறு நடந்துகொண்டால் எனது அக்கா மகனைக் கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார்கள் என்றும், எதிரிகள் 4ம் எதிரி கோகுல்ராசுக்கு வேண்டியவர்கள் என்றும், அவர் தலைமையில் தான் வந்துள்ளதாகவும், அவர்கள் தெரிவித்தார்கள் என்றும், 05.09.2019 அன்று மாலை 6 மணியளவில் நானும், என் அண்ணன் மகன் சரண்குமாரும், எனது அக்காவும், நானும் மற்றும் எனது அக்கா மகனுடன் பேசிக் கொண்டிருந்தபோது அங்கே வந்த இவ்வழக்கு எதிரிகள் 4நபர்களும், மற்றும் 2 இளவர்களும், எனது அக்கா மகனைப் பார்த்து எங்களைப் பார்த்தா டான்ஸ் ஆடுகிறாய், உன்னை தொலைத்துவிடுகிறோம் என்று மிரட்டிய போது எனது அக்கா குறுக்கிட்டு நான் பார்த்து கொள்கிறேன் என்று கூறி சமாதானம் பேசியதாகவும், பின்பு அங்கிருந்து சென்றுவிட்டு இரவு சுமார் 7.30 மணியளவில் எனது அக்கா மகன் மற்றும் எனது அண்ணன் மகன் அருகில் உள்ள சுரேஷ்குமார் என்பவர் வீட்டில் பேசிக்கொண்டிருந்தபோது 1ம் எதிரி எனது அக்கா மகனை கையால் அடித்தார் என்றும், அதை தடுக்க வந்த சரண்குமாரை இளவர் சரவணன் சூரி கத்தியால்

Sd/ R. Velaras,
I Additional District Judge,
Salem.

வெட்டினார் என்றும், அதனால் மேற்படி சரண்குமாருக்கு தலை, நெற்றி மற்றும் சுண்டுவிரல் ஆகியவற்றில் காயம் ஏற்பட்டுவிட்டது என்றும், இதனை பார்த்து நானும், எனது அக்கா கணவரும், எனது அக்காவும் தடுத்தார்கள் என்றும், எனது அக்கா கணவரை 1ம் எதிரி எட்டி உதைத்து கிழே தள்ளினார் என்றும், எனது அக்காவை 1ம் எதிரி கிழே தள்ளி அவர் வைத்திருந்த கத்தியால் வெட்டினார் என்றும், அதனால் என் அக்காவுக்கு வலது முழங்கையில் காயம் ஏற்பட்டது என்றும், 2 மற்றும் 3ம் எதிரிகள் எனது அக்காவையும், எனது அக்காவின் கணவரையும், என் அக்கா மகனைக் காப்பாற்றிவிட கூடாது என்று பிடித்து கொண்டார்கள் என்றும், அப்போது 4ம் எதிரி ஒன்றும் நடக்காது என்று கூறி எங்களை வஞ்சகமாக ஏமாற்றி எங்கள் வீட்டிற்கு கொண்டுவந்து விட்டுவிட்டார்கள் என்றும், ஆனால் எனது அக்கா, எனது அக்கா மகனை மீட்பதற்காக மீண்டும் அங்கே சென்றபோது 1ம் எதிரி எனது அக்கா மகனை சூரிகத்தியால் இடதுபக்க அல்லையில் குத்தினார் என்றும், இளவர் சரணவன் எனது அக்கா மகனின் வலது கால் முட்டியில் சூரிகத்தியால் வெட்டினார் என்றும், 2 மற்றும் 3 எதிரிகள் அதனை தடை செய்யாமல் வேடிக்கை பார்த்து கொண்டிருந்தார்கள் என்றும், மேற்படி சம்பவத்தில் 2 மற்றும் 3 எதிரிகளுக்கு சம்மந்தம் உள்ளது என்றும் காயம்பட்ட எனது அக்கா மகன் ரத்தம் சொட்டசொட்ட அருகிலுள்ள அழகு என்கிற சுரேஷ்குமார் வீட்டிற்குள் சென்று ஒளிந்து கொண்டார் என்றும், இதனை பார்த்த அருகிலுள்ள ரவிச்சந்திரன் மகன் கௌதம், நானும், என் அண்ணன் மகன் கௌதமும் ஏன்டா திலீப்குமாரை வெட்டினீர்கள் என்று கேட்டபோது அவர்கள் கையில் வைத்திருந்த கத்தியை காட்டி அருகில் யாரும் வந்தால் உங்களையும் வெட்டிவிடுவோம் என்று எங்களையும் மிரட்டினார்கள் என்றும், பின்னர் அங்கிருந்து 1ம் எதிரியும், இரண்டு இளவர்களும் ஓடிவிட்டார்கள் என்றும், அவர்களை தொடர்ந்து 2 மற்றும் 3 ம் எதிரிகளும் ஓடிவிட்டார்கள் என்றும்,

Sd/ R. Velaras,
I Additional District Judge,
Salem.

காயம்பட்ட எனது அக்காவும், எனது அக்கா மகனும், எனது அண்ணன் மகன் சரண்குமாரும், 108 ஆம்புலன்ஸ் மூலம் சேலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தோம். எனது அக்கா மகன் இறந்துவிட்டதால் அவரது உடலை சவகிடங்கிற்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், எனது அக்காவும், சரண்குமாரும் உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்ந்தார்கள் என்றும், மல்லூர் போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் தான் உண்மை என்றும் தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மைக்கு புறம்பாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் 1ம் எதிரி வெட்டி கொலை செய்யப்பட்டுவிட்டார் என்ற காரணத்தினால் தான் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்குவிசாரணை</u>

இல்லை

Sd/ R. Velaras,<br>
I Additional District Judge,<br>
Salem.